**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.62** **நாள்: 05.04.2026**

**இளம் வாக்காளர்கள், புதிய வாக்காளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி, வடபழனி ஃபோரம் மாலில் (Forum Mall)**

**100% வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், தேர்தல் தொடர்பான வினாடி வினா போட்டி மற்றும் திடீர் குழு நடனம் (Flashmob) மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறாக, இன்று (05.04.2026) தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி,வடபழனி ஃபோரம் மாலில் (Forum Mall) 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், தேர்தல் தொடர்பான வினாடி வினா போட்டிகளில் கல்லூரி மாணவர்கள், இளம் வாக்காளர்கள், புதிய வாக்காளர்கள் மற்றும் பொதுமக்களிடம் வினாடி வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வினாடி வினா நிகழ்வில் சரியான விடை அளித்த வாக்காளர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வடபழனி ஃபோரம் மாலில் (Forum Mall) 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து திடீர் குழு நடனம் (Flashmob) மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு நடனம் இன்று (05.04.2026) நடைபெற்றது.

இந்த நடனக் குழுவினர் "எனது வாக்கு எனது உரிமை" எனது ஓட்டு விற்பனைக்கு அல்ல, "உங்கள் ஓட்டு உங்கள் குரல்" ஏப்ரல் 23 வாக்களிப்போம், 100% வாக்களிப்போம் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு நடனம் ஆடினர்.

இந்த நடனக் குழுவினருடன் பொதுமக்களும் ஆர்வமுடன் இணைந்து நடனம் ஆடி வாக்குப்பதிவு நாளன்று வாக்களிப்பதாக உறுதியளித்தனர். இந்த கலை நிகழ்ச்சிகளை ஏராளமான இளைஞர்கள், பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

**"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா"**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**